இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 27.07.2026

# நீட் விலக்கே நிரந்தரத் தீர்வு!

**போ**ராட்டம் நடத்துகிறவர்கள் தங்கள் இலக்கை மிகச் சரியாகத் தீர்மானிக்க வேண்டும் என்றும், அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகுவது முக்கியமல்ல, நீட் தேர்வையே முற்றிலுமாக விலக்க வேண்டும் என்பதே இறுதித் தீர்வாக இருக்க வேண்டும் என்றும் நாம் முன்பு எழுதிய தலையங்கத்தில் சொல்லி இருந்தோம். நீட்தேர்வுரத்து என்பதுதான் நடந்து கொண்டிருக்கும் குற்றங்களுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கும்.

**கரப்பான் பூச்சி ஜனதாக் கட்சி முன்னெடுத்த போராட்டத்தின் வெப்பம் தாங்க முடியாமல் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் இப்போது தனது அமைச்சர் பதவியை விட்டு விலகி இருக்கிறார். அவர் பதவி விலகலோடு இப்பிரச்சினை முடிந்து விடப் போவது இல்லை. தனது தவறை உணர்ந்தும் அவர் பதவி விலகவில்லை. டெல்லி தொடங்கி இந்தியா முழுவதும் நடைபெற்று வரும் இளைஞர்கள், மாணவர் போராட்டத்தை இந்தியாவின் தேசவிரோத சக்திகள் பயன்படுத்தி விட்டார்களாம், அதைத் தடுப்பதற்காக பதவி விலகுகிறாராம். போராட்டம் நடத்தும் மாணவர்கள் மீது சட்டம் பாய்ந்து விடக் கூடாதாம். அதனால் அவர் பதவி விலகுகிறாராம். இது எதைக் காட்டுகிறது?**

அமைச்சர் தர்மேந்திர பிரதான், இதுவரை நீட் தேர்வுகளில் நடந்த முறைகேடுகளை ஒப்புக் கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. தான் ஏதோ சரியாகத்தான் நடந்து கொள்வதைப் போலவும், மாணவர்கள்தான் உணராமல் போராட்டம் நடத்துவதாகவும், அந்தப் போராட்டத்தை தேச விரோத சக்திகள் பயன்படுத்தி வருவதாகவும் நல்லபிள்ளை வேஷம் போடுகிறார் தர்மேந்திர பிரதான்.

**நாட்டில் நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு உண்மையான, முழுமையான, நிரந்தரமான தீர்வைக் காட்ட முடியாத பிரதமர் மோடி, ஒப்புக்கு ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானை பதவி விலக வைத்துள்ளார். அவருக்கு பதிலாக யார் ஒன்றிய அமைச்சராக வந்தாலும் அவர்களும் தர்மேந்திர பிரதான் போலவே நடந்து கொள்ளப் போகிறார்கள். நீட் தேர்வு நடக்கத்தான் போகிறது. முறைகேடுகள் நடக்கத்தான் போகிறது. கேள்வித் தாள்கள் முன்கூட்டியே வெளியாகும். பத்து நாட்கள் செய்தி வரும். அவ்வளவுதான். அடுத்த பிரச்சினைக்கு நாடும், நாட்டு மக்களும் போய்விடுவார்கள். இதுதான் பிரதமர் மோடியின் நினைப்பு ஆகும்.**

2017 ஆம் ஆண்டு முதல் நீட் தேர்வு நடக்கிறது. அது முதல் தமிழ்நாடு எதிர்த்து வருகிறது. மூன்று முறை இதற்கு எதிராக சட்ட மசோதாக்களை நிறைவேற்றி அனுப்பி இருக்கிறது தமிழ்நாடு. அதை குப்பைக் கூடைக்குள் போட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆனால் இப்போதுதான், தேர்வில் முறைகேடு நடப்பதாக பிரதமர் மோடிக்கு தெரிய வந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விதமான முறைகேடுகள் இத்தேர்வில் நடக்கும். ஆள்மாறாட்டம் நடக்கும். கேள்வித் தாள் வெளியாகும். ஒரே சென்டரில் எழுதியவர்கள் வரிசையாக ரேங்க் பட்டியலில் வருவார்கள். திடீரென சிலருக்கு மட்டும் கூடுதல் மதிப்பெண் போடுவார்கள். இப்படி தொடர்ந்து நடக்கும். அப்போதெல்லாம் ஏன் பிரதமர் அவர்கள் இதுபற்றி வாய் திறக்கவில்லை?

**அரியலூர் அனிதா தொடங்கி தமிழ்நாட்டில் மட்டும் எத்தனை இளம் உயிர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். தமிழ்நாட்டைப் போலவே வட மாநிலங்களிலும் எத்தனை உயிர்கள் பறிபோனது? அப்போதெல்லாம் பிரதமர் அவர்கள் இதுபற்றி பேசினாரா? இல்லை.**

சி.பி.ஐ. பலரையும் கைது செய்து அடைத்துள்ளது. அப்போதெல்லாம் பிரதமருக்கு இது தெரிவிக்கப் படவில்லையா?

‘பல லட்சம் கோடி பிசினஸ் நடக்கும் தொழிலாக ‘நீட்’ தேர்வு இருக்கிறது. இதில் லட்சக்கணக்கில் ஒவ்வொரு மாணவரும் செலவு செய்ய வேண்டி உள்ளது’ என்று காட்டுக் கத்தல் போட்ட போதெல்லாம், ‘நீட் மூலமாகத்தான் தகுதி தீர்மானிக்கப்படுகிறது, தமிழ்நாடுதான் எல்லாவற்றையும் எதிர்க்கிறது’ என்று மழுப்பி வந்தார்கள். இப்போது தேர்வு முறைகேட்டை ஒப்புக் கொண்டு வீடியோ வெளியிடுகிறார் பிரதமர்.

வினாத்தாள் கசிவுகள் சாதாரணப் பிரச்சினை இல்லையாம். மாணவர்களை மன உளைச்சல் ஏற்படுத்தும் பிரச்சினையாம். அவ்வளவுதான் பிரதமர் கொடுத்துள்ள வாக்குறுதி. இனி எந்தத் தவறுமே நாட்டில் நடக்காது. அவர் கிளம்பி விடுவார்.

‘நீட்’ தேர்வு முறைகேட்டில் ஈடுபட்டால் 10 ஆண்டுகள் சிறை, 10 கோடி அபராதம் என்று 8 ஆண்டுகள் கழித்து சட்டம் போடுவதற்கு வெட்கமாக இல்லையா?

**நாடு முழுவதும் இளைஞர்கள், மாணவர்கள் நடத்தும் போராட்டத்தை எப்படியாவது அமுக்க வேண்டும் என்பதற்காக தர்மேந்திர பிரதானை பதவி விலக வைத்துள்ளார்கள். மற்றபடி இத்தேர்வில் வழக்கமான முறைகேடுகள் தொடரத்தான் போகிறது. கோச்சிங் செண்டர்கள் அடிக்கும் கொள்ளைகள் தொடரவே போகிறது. படிக்க முடியாமல், பணம் கட்ட முடியாமல் மாணவர்கள் படும் வேதனை தொடரவே போகிறது. வினாத்தாள் கசிவுகள் நடக்கவே போகிறது. ஒன்றிய அரசால் இது எதையும் தடுக்க முடியாது.**

**‘நீட் தேர்வு ரத்து’ என்பதே நிரந்தரத் தீர்வு. அதைத்தான் பிரதமர் மோடியிடம் நாடு எதிர்பார்க்கிறது.**





கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் தேர்தலில் இரா.கிரிராஜன் எம்.பி. வெற்றி பெற்றதை முன்னிட்டு நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பார்கவுன்சில் உறுப்பினர் வழக்கறிஞர் திருமதி. சாவித்திரி செந்தில் குமார் மற்றும் தலைமை கழக நிர்வாகிகள், சட்டத்துறை நிர்வாகிகள் உள்ளனர்.

### திருவைகுண்டம் அருகே சம்பவம்:

## கல்குவாரியில் பணம் கேட்டு மிரட்டிய த.வெ.க.நிர்வாகி!

திருவைகுண்டம், ஜூலை 27-

தூத்துக் குடி மாவட்டம் திருவை குண்டம் அருகே பத்மநாப மங்கலத்தில் தனியார் கல்குவாரி செயல்பட்டு வருகிறது. திருவைகுண்டம் மேற்கு ஒன்றிய த.வெ.க. செயலாளர் பால முருகன் உள்பட இருவர் நேற்று அந்த கல்குவாரிக்கு சென்று பணம் கேட்டுள்ளனர். அங்குள்ள பணியாளர்கள் பணம் கொடுக்க மறுத்ததால் ஆத்திரமடைந்த அவர்கள் இருவரும் கல்குவாரி மேலாளர் உள்ளிட்டவர்களை மிரட்டியுள்ளனர். மேலும் அங்கிருந்த கம்ப்யூட்டர், டிவி, இரு சக்கர வாகனம் ஆகியவற்றை அடித்து நொறுக்கி சூறையாடியுள்ளனர்.

இதுகுறித்து கல்குவாரி மேலாளர் பூலையா, திருவைகுண்டம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் செயலாளர் பால முருகன் (33), அவரது சகோதரர் முண்டன் என்ற முண்டசாமி (36) ஆகிய இருவர் மீதும் 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிந்து அவர்களை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் திருவைகுண்டம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் இராணிப் பேட்டை ஆர். விநோத் காந்தி புத்தகம் வழங்கி வாழ்த்துப் பெற்றார்.



தூத்துக்குடியில் காவல்துறையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு, வன்முறைக்கு ஆளாகி உயிரிழந்த அருணாசலம் அவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆறுதல் கூறினார். காவல் நிலையத்தில் தான் காவலர்களால் தாக்கப்பட்டதாக அருணாசலம் வாக்குமூலம் அளித்துள்ள நிலையில், இன்னும் த.வெ.க. அரசு உரிய விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்காதது ஏன்? பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தினார். உடன் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ‘நீட்’ பிரச்சினை:

## மோடிக்கு இளைஞர்கள் மூன்றாவது தோல்வியைக் கொடுத்துள்ளனர்!

### முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு விமர்சனம்!

சென்னை, ஜூலை.27.

‘நீட்’ பிரச்சினையில் பிரதமர் மோடிக்கு இளைஞர்கள் மூன்றாவது தோல்வியைக் கொடுத்துள்ளனர் என்று சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கூறியுள்ளார்.

முன்னாள் சட்டப் பேரவை தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:-

நீட் தேர்வுக்கு எதிராக கரப்பான் பூச்சி ஜனதா கட்சி முன்னெடுத்த போராட்டத்தில் தன் எழுச்சியுடன் கலந்து கொண்ட மாணவர்களையும், இளைஞர்களையும் பார்த்து மிரண்டு போன பிரதமர் மோடி அவர்கள் பாகிஸ்தான்,பங்களாதேஷ், இலங்கை போன்ற அண்டை நாடுகளில் ஏற்பட்ட நிலை நமக்கும் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் ஒன்றிய கல்வி அமைச்சர் தன்மேந்திர பிரதானை பதவி விலகச் செய்துள்ளார்.



தேர்தல் வழக்கு ஒன்றில் தீர்ப்பளித்த சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ஜெயச்சந்திரன் அவர்கள் உச்சநீதிமன்றம் இது போன்ற வழக்குகளில் 10 ஆண்டுகளுக்கு மேல் காலதாமதப் படுத்துவது நமது அண்டை நாடுகளை போல் Gen z இளைஞர்கள் கொதித்தெழும் சூழ்நிலை ஏற்படும் என்று ஏற்கனவே எச்சரித்து இருந்ததை தற்போது நினைவு படுத்த விரும்புகிறேன்.

விவசாயிகள் தொடர் போராட்டத்தை தொடர்ந்து மூன்று வேளாண் சட்டங்களை திரும்ப பெற்று முதல் தோல்வியை தழுவினார் பாரதப் பிரதமர். தொகுதி மறு வரையறை மசோதாவில் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்த முன் முயற்சி அம்மசோதா தோற்கடிக்கப்பட்டு பாரத பிரதமருக்கு இரண்டாவது தோல்வியை கொடுத்தது. இப்போது Gen z இளைஞர்கள் மோடிக்கு மூன்றாவது தோல்வியை கொடுத்துள்ளார்கள்.

காங்கிரசால் முடியாததை கரப்பான் பூச்சி ஜனதா கட்சி முடித்துக் காட்டி இருக்கிறது.ஆனாலும் நீட் தேர்வை ரத்து செய்வதுதான் நிரந்தர தீர்வு. இத்தனையும் கண்டு கொள்ளாமல் கடந்து செல்லும் தமிழக முதல்வரே! உங்களுக்கும் மிக விரைவிலேயே தமிழக மக்கள் இது போல் தக்க பாடம் புகட்டுவார்கள் CMsir.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## இளம் பெண்ணை ஆபாச வீடியோ எடுத்து பாலியல் தொல்லை!

### ஆற்காட்டில் - த.வெ.க. மாவட்டச் செயலாளர் மீது வழக்குப் பதிவு!

ஆற்காடு, ஜூலை 27

இளம் பெண்ணை ஆபாச வீடியோ எடுத்து பாலியல் தொல்லை கொடுத்த விவகாரத்தில் ராணிப்பேட்டை மேற்கு மாவட்ட த.வெ.க. செயலாளர் மீது ஆற்காடு நகர போலீசார் 4 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு மாசாப்பேட்டை அண்ணா நகர் 1 கண்ணமங்கலம் கூட்ரோடை சேர்ந்த 34 வயது இளம்பெண் கடந்த 23ம் தேதி ஆற்காடு டவுன் போலீசில் புகார் அளித்தார். அந்த புகாரில் கூறியிருந்ததாவது:

கடந்த 10 மாதங்களுக்கு முன்பு த.வெ.க.வில் என்னை இணைத்துக் கொள்வதற்காக அந்த கட்சியின் ராணிப்பேட்டை மேற்கு மாவட்டச் செயலாளர் விஜய் மோகனை செல்போனில் தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் கட்சியில் பதவி என்பது அவ்வளவு சுலபமாக கொடுத்து விட முடியாது. நான் உனக் காகசெய்கிறேன் என்று என்னிடம் பேச ஆரம்பித்தார். தொடர்ந்து எனக்கு பாலியல் ரீதியாக தொல்லைகொடுக்க ஆரம்பித்தார். மேலும் இன்ஸ்டாகிராமில் தொடர்புகொண்டு ஆடையின்றி வீடியோ அனுப்பும்படி வற்புறுத்தினார். அதோடு என்னை ஆபாச வீடியோக்கள் எடுத்துவைத்துக்கொண்டு மிரட்டி வருகிறார்.

இது தொடர்பாக ராணிப்பேட்டை எம்.ல்.ஏ. தாஹிராவிடம் (தவெக) கூறி னேன். அவர் ‘வீடியோககளை டெலிட் செய்து விட்டு இத்துடன் பிரச்னையை முடித்து கொள்ளுங்கள்’ என்றார். அதற்கு சரி என கூறிய மாவட்ட செயலாளர் வீடியோ எதையும் டெலிட் செய்யவில்லை. வீடியோ எல்லாம் என்னிடம் உள்ளது. உன்னை சும்மா விட மாட்டேன். நான் ஆளுங் கட்சி மாவட்ட செயலாளர். என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று கூறி என்னை ஆபாசமாக திட்டி மிரட்டினார்.

மேலும் தனியார் தொலைக்காட்சி நிருபர் ஜான் பிரிட்டோ என்பவர் போன் செய்து, ‘ஏன் இது போல செய்கிறாய்? உன்னை சும்மா விட்ருவோமா?’ என மிரட்டினார். அதோடு சாலையில் நடந்து சென்றால், யார் யாரோ மடக்கி மிரட்டுகின்றனர். இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். ஆகவே விஜய் மோகனை கைது செய்து அவருடைய செல்போனில் இருக்கும் என்னுடைய. ஆபாச வீடியோக்களை டெலிட் செய்து அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.

மேலும் தமிழக முதல்வரின் தனிப்பிரிவு, டி.ஜி.பி. அலுவலகம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகிய வற்றுக்கும் இந்த புகார் மனுவை அனுப்பி உள்ளார். அதனை தொடர்ந்து சிப்காட் இன்ஸ்பெக்டர் மங்கையர்க்கரசி ஆற்காடு நகர காவல் நிலையம் வந்து இளம்பெண்ணிடம் சுமார் 4 மணி நேரத்திற்கு மேல் விசாரணை செய்தார்.

இந்நிலையில் த.வெ.க. மாவட்டசெயலாளர் விஜய் மோகன் மற்றும் ஜான் பிரிட்டோ ஆகிய இருவர் மீதும் பிஎன்எஸ் பிரிவுகள் 75 பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்தல்), 76 (பெண்ணை நிர்வாணமாக இருக்க கட்டாயப்படுத்துவது), 77 (பெண்ணின் அந்தரங்கத்தை படம் பிடித்தல்), 351(2) (கிரிமினல் மிரட்டல்) ஆகிய 4 பிரிவுகளின் கீழ் ஆற்காடு டவுன் போலீசார் நேற்று வழக்குப்பதிவு செய்தனர். தொடர்ந்து இருவரிடமும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் ஆற்காட்டில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.